


அமரர்

## செல்லத்துரை-சண்முகநாதன்

அவர்களின் நினைவாக ஒளிரும்

# நினைவு மலர்

15-12-2021

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கணேசபுரம்,கிளிநொச்சியை வசிப்பிடமாகக் கொண்ட

## அமரர் செல்லத்துரை–சண்முகநாதன்

அவர்களின் நினைவாக ஒளிரும்

# நினைவு மலர்

**15-12-2021**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறப்பு: 1952 - 11 - 04

இறப்பு: 2021 - 11 - 15



# அமரர்

## செல்லத்துரை-சண்முகநாதன்

அவர்களின்

### திதி வெண்பா

ஆண்டு பிலவவருட ஐப்பசித் திங்கள்
இருபத்தொன்பதாம் நாள் வளர்பிறை துவாதசி திதியில்
சிறப்புறு சீராளச் செம்மல் எம் சண்முகநாதன்
சிவலோகப்பேறு எய்தினான் காண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எம்மை அன்புடன் வளர்த்து அமரத்துவமடைந்த எம் அப்பாவிற்கு

# சமர்ப்பணம்

*தந்தைக்கோர் இலக்கணமாய்*

*பாசத்தின் பிறப்பிடமாய்*

*தரணியிலே நாம் உயர்ந்திட*

*தன்னையே உபந்தளித்த*

*எமது அன்புத் தெய்வத்தின்*

*பொன்னடிகளில் இந்நூலை*

*சமர்ப்பிக்கின்றோம்*

*ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!*

இங்ஙனம்,
குடும்பத்தினர்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஞ்சபுராணம்

## தேவாரம்

தோடுடைய செவியன் விடையேறியோர் தூவெண்மதி சூடிக்
காடுடையசுட லைப்பொடிபூசிஎன்1 உள்ளங்கவர் கள்வன்
ஏடுடையமல ரான்முனைநாட் பணிந் தேத்தஅருள் செய்த
பீடுடையபிர மாபுரம்மேவிய பெம்மானிவ னன்றே.

## திருவாசகம்

மெய்தான் அரும்பி விதிர்விதிர்த்து உன்விரை
யார்கழற்குஎன்
கைதான் தலைவைத்துக் கண்ணீர் ததும்பி
வெதும்பியுள்ளம்
பொய்தான் தவிர்ந்துன்னைப் போற்றி சயசய
போற்றியென்னும்
கைதான் நெகிழ விடேன்உடை யாய்என்னைக்
கண்டுகொள்ளே.

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே !
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே !
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே !
சித்தத்துள் தித்திக்கும் தேனே !
அளிவளர் உள்ளத்(து) ஆனந்தக் கனியே !
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்பல்லாண்டு

மன்னுக தில்லை வளர்கநம் பத்தர்கள்
வஞ்சகர் போயகலப்
பொன்னின்செய் மண்டபத் துள்ளே புகுந்து
புவனியெல் லாம்விளங்க
அன்ன நடைமட வாள்உமை கோன்அடி
யோமுக் கருள்புரிந்து
பின்னைப் பிறவி யறுக்க நெறிதந்த பித்தற்குப்
பல்லாண்டு கூறுதுமே

# திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப் பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னையென்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான் மகிழ்ந்து பாடி
அறவா நீயாடும்போது உன் அடியின்கீழ் இருக்க வென்றார்.

# திருப்புகழ்

இறவாமற் பிறவாமல் எனையாள்சற் - குருவாகிப்
பிறவாகித் திரமான பெருவாழ்வைத் -தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனேசொற-குமரேசா
அறநாலைப் புகல்வோனே அவிநாசிப்- பெருமாளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் செல்லத்துரை சண்முகநாதன் அவர்களின்

# வாழ்க்கைச் சுருக்கம்

பனந்தோப்பும், கடல்வளமும், வயல்நிலமும் சூழப்பெற்று வளம் கொளிக்கும் பூநகரி தம்பிராயைச் சேர்ந்த அமரர் செல்லத்துரை அமரர் வள்ளிப்பிள்ளை தம்பதிகளுக்கு ஆறாவது ஆண்பிள்ளையாக 1952ஆம் ஆண்டு கார்த்திகைமாதம் 4ஆம் நாள் இப்பூமியில் அவதரித்தார்.

முருகப்பெருமானின் நாமம் இல்லத்தில் எந்நேரமும் ஒலித்திட வேண்டும் என்று பெற்றோர் "சண்முகநாதன்" எனப்பெயர் சூட்டி குஞ்சய்யா எனவும் அன்போடு அழைத்தனர். பிள்ளைநார், செல்வராசா, ஜெகநாதன், நாகநாதன், மங்கையற்கரசி ஆகியோரை மூத்த சகோதரர்களாகவும் ஆசைத்தங்கையாக கமலாம்பிகையையும், ஆசைத்தம்பியாக யோகநாதனையும் கொண்ட அன்பு நிறைந்த குடும்பத்தில் ஓர் அங்கமானார். வாழ்வில் கடைப்பிடித்து நடக்கவேண்டிய ஒழுக்கவிழுமியங்களை அனுதினமும் போதிக்கும் தாய், தந்தையின் வளர்ப்பின் கீழ் நற்பண்புகளும் இறைபக்தியும் நிறைந்த ஊர்போற்றும் புதல்வனாக வன்னேரியில் வளர்ந்து வந்தார்.

இவர் தனது கல்வியை வன்னேரிக்குளம் மகாவித்தியாலத்தில் கற்று இதைத்தொடர்ந்து அவரின் தொழிலாக விவசாயத்தை செய்து வந்தார்.

தனது மணப்பருவத்தில் தன்மனம் விரும்பிய மங்கையான கிளிநொச்சி கணேசபுரத்தைச் சேர்ந்த மார்க்கண்டு கண்மணி தம்பதிகளின் இரண்டாவது புதல்வியான ஞானாம்பிகை என்பவரை தனது பெற்றோர் சம்மதத்துடன் 1974ஆம் ஆண்டு கார்த்திகைமாதம் 22ஆம் திகதி கரம் பிடித்தார். இருவரும் கருத்தொருமித்த தம்பதிகளாக அன்பையும் அறத்தையும் பேணி இல்லறம் எனும் நல்லறத்தை மகிழ்வுடன் கணேசபுரம் எனும் கிராமத்தில் நடாத்தி வந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நினைவுகளில்









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது இல்லற வாழ்க்கையின் பயனாக வம்சத்தின் குலம் விளங்க சண்முகப்பிரியா ( யாமினி), இளங்கீரன் (கண்ணன்), நந்தினி (றோசி), வதனகீரன், மோகனப்பிரியா (அனிதா) ஆகிய செல்வங்களைப் பெற்று அவர்களைக் கல்வியிலும், நற்பக்கவழக்கத்திலும் சிறந்து விளங்க வைத்து கந்தசாமிகோயில் அருகாமையில் துவிச்சக்கரவண்டி திருத்தினராகவும் தொழில்புரிந்து சீரும் சிறப்புடனும் வாழ்ந்து வந்தார். அக்காலத்தில் அவர் அங்கு மிகவும் அன்பாகவும் எல்லோரிடமும் மிகவும் பாசமாகவும் எல்லோருக்கும் உதவிசெய்து மனப்பாங்கு உடையவராகவும் ஊர்மக்கள் போற்றும் நல்மகனாகவும் திகழ்ந்தார்.

"சைக்கிள் கடை சண்முகண்ணை" சிறுவர் முதல் பெரியவர் வரை அன்பாக மனிதனாக திகழ்ந்த இவர் கிராம வளர்ச்சிக்காகவும் தமிழின் பற்றாளனாகவும் காணப்பட்டார். கிராம முன்னேற்றத்திற்காக கிராம அபிவிருத்தி சங்கத்தில் பல பதவிகளைப் புரிந்து தன் சேவைகளை செவ்வென ஆற்றி வந்தார். இதுமட்டுமல்ல சனசமூக நிலையத்தில் பல பதவிகளை வகித்து சேவையாற்றியது போற்றுத்தற்குரியது. கிராம மட்டுமல்லாது செஞ்சிலுவை சங்க வாழ்நாள் அங்கத்தவராக இருந்து பணிபுரிந்தமையும் சிறப்பான கூட்டுறவாளனாக விளங்கியமையும் சிறப்புமிக்கதே. இவ்வாறான இவரது சேவையின் பலனாக சாமாதான நீதவான் (JP) பதவியையும் பெற்றிருந்தமை பாராட்டிற்குரிய விடயமே. பல வழிகளிலும் சேவகனாய் திகழ்ந்த சண்முகநாதன் அவர்கள் தன் குடும்பத்திலும் நல்லதோர் கணவனாய் அன்புடன் கூடிய கண்டிப்பான தந்தையாய் கொஞ்சிக் குலாவும் தாத்தாவாய் அன்பும், பண்பும் வழிகாட்டலுடன் தன் குடும்பத்தை செவ்வெனே வழிகாட்டி வடிவமைத்து வாழ்ந்து வரும் நல்ல வேளையில் காலன் பொறாமையால் 2021 ஆம் ஆண்டு கார்த்திகைத் திங்கள் பதினைந்தாம் நாள் எம்மைவிட்டு சண்முகநாதன் அவர்களை களவாடி சென்றுவிட்டான். அனைவரையும் ஆழ்ந்ததுயரில் ஆழ்த்திவிட்டு அனைவரின் துயரும் ஆறுதலையடட்டும் ஆத்மா சாந்தியடைய....

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

- குடும்பத்தினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனைவி புலம்பல்



அன்புடன் கரம்பற்றி ஆதரவு பலவும் காட்டி
மாலையிட்ட நாள்முதல் மனக்குறை எதுவுமின்றி
மணவாழ்க்கையின் பேறாய் இவரைப்பெற்று
நாற்பத்து ஆறு ஆண்டுகள் எக்குறையும் இல்லாமல்
கண்ணை இமை காப்பதுபோல காத்து வளர்த்தீர்களே
உமைப்போல ஓர் தந்தை இவ்வூரில் இல்லை என
பெருமையுடன் எண்ணி வாழ்ந்தேனே ஐயா.
எமக்கென்று ஒருகுறையும் வைக்கவில்லை ஆனால்
எனக்கொரு குறைவைத்து விட்டீர்களே இனி நான்
சமைப்பது யாருக்காக சுறுசுறுப்பாக இருக்க எண்ணுவது யாருக்காக
தன்னந்தனிமையை என்றுமே எனக்குத் தந்ததில்லை நீர்
ஆனால் இப்போது தவிக்கவிட்டுச் சென்றீரே
வைத்தியசாலை சென்றுவரும் எனது தெய்வத்திற்கு
நேரத்துக்கு உணவுவேண்டும் என அதிகாலை எழுந்து
உணவு தயாரித்தேனே அதை உண்ணாமலே போய்விட்ரே
இனி எங்கு என் கையால் உணவளிப்பேன் உமக்கு
வையகத்தில் பிறந்தோர்க்கு ஓர் நாள் இறப்புண்டு ஆனாலும்
இன்னும் சில ஆண்டுகள் என்னுடன் வாழ்ந்திருக்கலாம் ஐயா
எந்த வேளையிலும் உங்கள் ஒளிமுகம்
என் கண்ணெதிரில் தெரிகின்றதே
அந்த மலர்ந்த முகத்தை எப்போது காண்பேன் நான்

- என்றும் பாசத்துடன்
அன்பு மனைவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள்மார் புலம்பல்

எங்கே போனாய் அப்பா!
பாலூட்டி தேனூட்டி எங்களை வளர்த்தாயே அப்பா
இப்போது எங்கே போனாய் அப்பா
சிரமங்கள் பல மத்தியிலும் பல துன்பங்கள் பட்டு
எங்களை ஆளாக்கி வளர்த்தாயே அப்பா
நீயின்றி இவ்வுலகில் நாம் என்ன செய்வோம் அப்பா
தீதும் நன்றும் சொல்வதற்கு யாருண்டு எமக்கு இனி
ஊரார் உமைப்போற்றும் போது தான் புரிகின்றது நீர் செய்த பணி
உற்றார், உறவினர் நீர் இல்லாதபோது உமைப்பற்றி உம் அருகே
வந்து கதறி அழுகையிலே உம்புகழ் எமக்குப் புரிகின்றது அப்பா
அல்லும் பகலும் பாராமல் எமைக்காத்த எம் தந்தையே
ஒன்று இருக்கும் போது அதன் அருமை புரியாது என்பார்கள்
அது உண்மைதான் அப்பா உம் பிரிவிலே தெரிகின்றது
உம் அருமை கடல்கடந்து நாம் சென்றாலும் எம் நினைவுகள்
எப்போதும் உமைச்சுற்றியே தான் அப்பா
அலைபேசியில் நீர் கதைப்பதே எமக்கு மகிழ்ச்சி
நாம் இப்போது யாரோடு கதைப்போம் அப்பா
வாருங்கள் என்று உங்களை நாங்கள் அழைத்தபோது
ஒரு புன்சிரிப்பில் எங்களை ஆச்சரியத்தில் ஆழ்த்துவீர்களே அப்பா
இப்போ காலன் உங்களை கூட்டிச்சென்று விட்டானே அப்பா
இனியார் இருக்கிறார் அப்பா எங்களுக்கு....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகனின் இதயத் துடிப்பு

கொள்ளிக்கூடம் தோளில் நான் சுமந்திட்ட நேரத்தில் இன்று
பள்ளிக்கூடம் விட்டபோது தோளில் என்னை சுமந்தீரே என்று
வேதனையாய் இருக்குதப்பா வேகும் உடல் பார்த்த போது
ஆண் பிள்ளையில் கடைசியாய் பிறந்தவன்
நான் கொள்ளிவைக்கவேண்டுமென்றோ

கனவில் கூட நினைக்கவில்லை ஏமாற்று செய்தியொன்று
போன் வழியாக என் காதில் வருமென்று
காலத்தின் நேரமதோ காலனவன் வேலையதோ
சிகிச்சை களத்தினிலே என் அன்னை – கதிகலங்கி
நின்றார் உங்கள் உயிர் பிரிந்திடவே.....

சொல்லி ஆற முடியவில்லை உங்கள் உடலில் தீயை வைத்து
வென்று விட்டேன் கடமையில் நான்
நொந்து விட்டேன் பிள்ளையாய் நான் –இன்னுமொரு
பிறவி வந்தால் உங்கள் தந்தை நான் ஆவேன்.

மகன்
சண்முகநாதன், வதனகீரன்
தம்பினான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பா இருக்கும் போது
அலட்சியப்படுத்துகின்றோம்
இறந்த பின் அழுது தீர்க்கின்றோம்
இருக்கும் போதே
சந்தோசப்படுத்துவோம்.

- என்றும் பாசத்துடன்
பிள்ளைகள்

# வேத்தி தேனுவின் மனதிலிருந்து....

கண்கள் இமைக்க மறந்து
இதயம் துடிக்க மறுத்த
தருணம் உங்களது மரணம் அம்மப்பா....

வானம் அளவுக்கு
என் அன்பு உன் மீது என்றால்
கடல் அளவுக்கு உன்மீது
நான் கொண்ட பாசம்
தெரியும் என கண்ணீரில் அம்மையா....

பாசத்தின் உறைவிடமே!
பண்பின் ஒளிவிளக்கே!
உற்றவர் சுற்றமும்
கூடிக்கழித்த உறவுகளை
கைவிட்டுச் சென்றதேனோ..?
பிரிவால் வாடி நிற்கின்ற உள்ளங்கள்
தேற்ற மொழியின்றி
தவிக்கின்றோம் – நின் உறவின்
அடி தேடித் துடிக்கின்றோம் அம்மப்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேரமக்கள் உள்ளத்திலிருந்து

*ஒரு வானம் ! ஒரு பூமி! ஒரு சூரியன் ! ஒரு சந்திரன் !*
*இவைகள் தம் செயற்பாட்டில் இருந்து*
*ஓய்வெடுத்துக்கொண்டதில்லை*
*அதுபோல் தந்தையின்றி வளர்ந்தோம் – என்ற*
*குறையின்றி*
*அப்பாவாய் நல்வழிப்படுத்தும்*
*ஆசானாய் தோளோடு தோள்நின்று*
*அன்பெனும் நீரூற்றி*
*உயர்வடையச் செய்த தெய்வத்தை*
*மனதாரப் பூசிக்கின்றோம்*
*காலமெலாம் நினைவில் சுமக்கிறோம்*

பேரமக்கள்
பிரேமன், சோபியா, சோபா, ரஜீபன்

கண்ணில் கோபத்தையும்
இதயத்தில் பாசத்தையும்
வைத்திருக்கும் ஒரே உறவு
அப்பா....

தந்தையே எனக்கு மீண்டும்
உன்னிடம் குழந்தையாக
மாறி உன் பாச
அரவணைப்பில்
மிதந்து கிடக்க ஆசை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருமக்கள் புலம்பல்

ஆசைக்கோர் மாமாவாய்
அன்புக்கோர் அரணாய்
கருணைக்கோர் இடமாய்
அறிவுக்கோர் ஆசானாய்
எம்முடன் வாழ்ந்தீரே

ஆலய வழிபாடும் தொண்டாற்றும் சிறப்பியல்பும்
சோராத செயலும் உமக்கான தனிச்சிறப்பு
இனி எமக்கேது இவ்வாறான உறவு
சுயநலமற்ற உம் உறவு
புவிவாழ்வு போதும் என்றா உறவுவிட்டு
நெடும்பயணம் சென்றீர்
நல்லவர் நெடுநாள் வாழ்வதில்லை
என மனம் தேற்றி ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!



# எங்கே எங்கள் அம்மையா!

அன்பும் அரவணைப்பும் வைத்திருந்த எங்கள் அம்மையா ஏன் எங்களை விட்டுப்பிரிந்தீர்கள்? துயரம் மேல் துயரமாய் தவிக்கவிட்டு சென்றதேனோ எங்கள் அம்மையா சின்னக்குழந்தை போல் எங்கள் காதை முறுக்கி எங்களோடு விளையாடுவீர்களே? எங்களை இறுதியில் நினைத்தீர்களா? பாசம் வைத்து அரவணைத்து விட்டு எங்களை ஆறாத்துயரில் ஆழ்த்தி விட்டுச்சென்று விட்டீர்கள் இனி எப்பிறவியில் உங்களை நாங்கள் காண்போம் அம்மையா....

உங்கள் அன்புப் பேரப்பிள்ளைகள்
தர்மிகா, டிவ்யன், நிவ்யா, ஹரிஷ்னவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தானின் இரங்கல் உரை

அன்புக்குரிய மைத்துனா- சண்முகநாதா உனக்கு நான் இரங்கலுரை கூறிவைக்க, என்னை பணித்துவிட்டாய். அத்தான் , அத்தான் என நீ சிறு வயதிலிருந்தே அன்போடும் கண்ணியத்தோடும் அழைத்தாய் நீ பூநகரியில் பிறந்தாலும் வளர்ந்து கல்வி பயின்றது யாவும் வன்னேரிக்குளத்தில் தானே.

நீ பாலனாக இருக்கும்போது மிக அழகாகவும் சிறிய குஞ்சுமுகத்தோடு இருந்தாய் ஐயா. அதனால் தான் உன்பெற்றோர் சகோதரங்கள் மட்டுமல்ல நாமும் சேர்ந்து உன்னைக் குஞ்சையா என அன்போடு அழைத்தோம். இன்றும் வன்னேரிக்குளத்தில் இந்தப்பெயரே வழங்கி வருகிறது. உனது அத்தான் உன் அக்காவை மணம் முடித்ததும் என்மீது கௌரவமான பாசமும் பண்பும், வைத்திருந்தாய்.

நீ திருணமாகி கிளிநொச்சி கணேசபுரம் சென்று வாழ்ந்தாலும் அந்தப்பண்பு குறையவில்லை. கணேசபுரத்தில் நீ வாழ்ந்த காலப்பகுதியில் அப்பகுதி மக்களுடன் எப்படி வாழ்ந்தாய் எவ்வளவு சமூகப்பணிபுரிந்தாய் என எங்களுக்குத் தெரியாது. ஆனால் உனது இறுதி நிகழ்வில் பங்கு பற்றிய பெரும்தொகை மக்களையும் அங்கு இரங்கலுரை வழங்கிய பெரியோர்களின் பெரும் தன்மையான பேச்சிலும் எமக்கு மிகத்தெளிவாக உணர்த்தியுள்ளது. இப்படியான பொதுச்சேவை மூலம் நாட்டுக்கு பணிசெய்த காரணத்தால்தான் உன்னை சமாதான நீதவான் பதவி தேடிவந்துள்ளது. இதையிட்டு நான் பூரண மகிழ்ச்சி அடைகிறேன்.

அண்மையில் எமது கிராமம் வன்னேரிக்குளத்தில் அங்குள்ளதான நிறுவனங்களாலும் , மக்களாலும் நான் பல வருடங்கள் சாமாதான நீதவானாக கண்ணியத்தோடு கடமை புரிந்ததைப் பாராட்டி அங்கு நிகழ்வு ஒன்று நடத்தப்பட்டது. அந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிகழ்வுக்கு நீ சமூகம் அளித்து அத்தானுக்கு மாலை அணிவித்தாய் அதை என்னால் மறக்கமுடியவில்லை ஐயா.

உனது இறுதிப்பயணத்தை முதல் அறிந்தவர் உன் ஆசை அக்காதான். அப்படிப்பட்டவர் உனக்கான இறுதி நிகழ்வையோ உன் அன்பான பாசமுகத்தையோ அவரால் வந்து பார்க்க முடியவில்லை. அவரின் உடல் நிலையின் காரணமாக அப்படி முடிந்துவிட்டது. சகோதரப்பாசம் மறக்க முடியாமல் துடிக்கிறார். உனது திடீர் மறைவையும் தாங்கமுடியவில்லை உன் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அத்தான்
ச.பொன்னுச்சாமி
சமாதான நீதவான்,
வன்னேரிக்குளம்

முயற்சியை எப்போதும்
கைவிடாதீர்கள்.
இன்றைய நாள்
கடினமாக இருக்கலாம்,
நாளைய நாள் மிகக்
கடினமாகக் கூட
இருக்கலாம், ஆனால்
நாளை மறுநாள்
உங்கள் வாழ்க்கையை
மாற்றும் புதியதொரு
விடியலாக மாறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் மாமா....

எண்மரிலே ஒருவராய் பிறந்து
எங்களுக்கு மாமனாய் வந்து
பாசமென வாழ்ந்த உறவை
காலனவன் பறித்தது ஏனோ?

காலனவன் எழுதி வைத்த
கடைசி பக்கம் முடியுமுன்பே
காவுகொண்ட உங்கள் வாழ்வை
போதுமென்றா அழைத்து விட்டான்

அக்காவின் அருகில் நீங்கள்
ஆசையுடன் வாழ்ந்த நாளை
பக்கம் பக்கமாக சொல்லி
துக்கத்தில் துடிக்கின்றார்

குஞ்சையா மாமா என்று
வாஞ்சையோடு நாமழைத்து
எங்கள் முன்னே வாழ்ந்த நாளை
எண்ணி எண்ணி கலங்குகிறோம்

என்றும் மாற புன்சிரிப்பும்
உரத்துப்பேசா மென்குரலும்
பாசம் உதிர்த்த பேச்சும்
நேசம் தாங்கிய தோளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எப்போதும் இருக்கும் என்று
ஆசையிலே நினைத்திருக்க
பாதியிலே விட்டு நீங்கள்
மீளாத் தூரம் போனீர்....

வன்னேரி மண்தொடங்கி
கணேசபுர வீதிகள் வரைக்கும்
மிதிவண்டி பாரா ஓழுங்கை
உங்களிடம் மறைந்திடுமோ

உங்களுடன் வாழ்ந்த நாட்கள்
உதிரத்திலே கலந்திருக்க
எங்கள் வாழ்வின் இறுதிவரை
இதயத்தில் நிறைந்திருக்கும்

உங்கள் ஆத்மா சாந்திக்காக
ஆண்டவனை இறைஞ்சிடுவோம்
மீண்டும் இந்த மண்பிறக்க
வேண்டுதல்கள் செய்திடுவோம்.

அன்பு மருமகன்
பொன் சிவகுமாரன் (முருகா)
நோர்வே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேரப்பிள்ளைகள் புலம்பல்

அன்புக்கும் பண்புக்கும்
இலக்கணமாய்த் திகழ்ந்தீர்கள்
முற்றத்து முழு நிலவே அம்மையா
கணேசபுரம் வயல் வீதியால்
என்னைப் பாடசாலை ஏற்றிச் சென்ற
அந்த நாட்கள் இனி எப்போது அம்மையா
எமக்குக் கிடைத்த பொக்கிசம் நீங்கள்
மென்மையான அந்தப் புன் சிரிப்பும்
மென்மையான பேச்சும் இனி
நாம் எங்கு காண்போம் அம்மையா
இறுதியாக உங்களைப் பிரிந்து
விமான நிலையத்தில் இருந்து நாம்
புறப்படும் போது
என்னையும் அம்மாவையும்
இறுக கட்டியணைத்தீர்கள் அம்மையா
மறக்கமுடியவில்லை.

- காவியா

> காயங்கள் ஆறியப்போகும்...
> கற்பனைகள் மாறிப்போகும்...
> கனவுகள் களைந்து போகும்...
> என்றுமே மாறாமல் இருப்பது
> தந்தை நம் மீது கொண்ட பாசமும்...
> நாம் தந்தை மீது கொண்ட பாசமும்....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேத்தி அஸ்வினியின் மனக்குமுறல்

தாத்தா நான் உங்களுடன்
போன் கதைக்கும் போது அதிகமாக கதைக்க மாட்டீங்கள்
இருந்தாலும் உங்களுடைய குரலில் எங்களுடன்
உரையாடும் உங்கள் தமிழ் அழகு தாத்தா.....
இறுதியாக உங்கள் பிறந்தநாளிற்கு நான் போன்
எடுத்தபோது உங்களை – உலகமாக
நினைத்து உங்களுக்கு சேவை செய்யும் – என் அம்மம்மா
உங்களுக்கு சமைத்து தரவில்லை என்று – எமக்கு
பொய் சொல்லி எங்களுடன் நகைச்சுவையாக
உரையாடி மகிழ்ந்தீர்கள் தாத்தா – இனி
உங்கள் குரலை எப்போ கேட்பம் தாத்தா
என்றும் நாங்கள் உம்மை நினைக்க வேண்டும் என்ற
என் அன்னை பெயரில் கலந்தீர்கள் தாத்தா?
என்றும் உங்கள் பிரிவால் உங்கள் குரலிற்காய் ஏங்கும்....

அஸ்வினி, அன்ரூ, ஆன்சி

வாழ்க்கையில் கிடைக்கும்
மிகப்பெரிய வெகுமதி
தந்தையின் அன்பை
முழுமையாக கிடைக்கப் பெற்றவர்கள்....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுயசரிதை

[illegible]
16/1, [illegible]
[illegible]
24.05-2021

[illegible] சுயசரிதை

[illegible]

[illegible]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவஞானம் சிறீதரன் பா.உ.
M.Ed.,B.A.,PGDE(Me).,Sp.Tr.(Ag)
யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டம்.
882, ஆறுமுகம் வீதி,
வட்டக்கச்சி, கிளிநொச்சி, இலங்கை.
☎ :021 2280024 021 2221595,
Fax :021 2280024 021 2221595,
:077 6913244
✉ : shritharanmp@gmail.com
🌐 : www.shritharan.com

පාර්ලිමේන්තුව
பாராளுமன்றம்
**PARLIAMENT**

SIVAGNANAM SHRITHARAN M.P
M.Ed.,B.A.,PGDE(Me).,Sp.Tr.(Ag)
Jaffna Electoral District.
882, Arumugam Road,
Vaddakachchi, Kilinochchi, Sri Lanka.
☎ :021 2280024 021 2221595,
Fax :021 2260024 021 2221595,
:077 6913244
✉ : shritharanmp@gmail.com
🌐 : www.shritharan.com

2021.12.10.

சேவை நோக்குடைய சிறந்த மனிதன்.

ஈழத்தமிழர் தம் பண்பாடு, பாரம்பரியங்களோடும், வரலாற்று மரபியல்களோடும் பின்னிப்பிணைந்துள்ள கிளிநொச்சி மாவட்டத்தின், பூநகர், தம்பிராய் மண்ணைத் தன் பூர்வீகமாகக் கொண்டு, மண வாழ்வின் பின்னர் தன் மனைவியின் ஊரான கணேசபுரம் கிராமத்தைத் தன் வாழ்விடமாக்கி அம்மண்ணிலேயே வாழ்ந்து பொலிந்தவர் அமரர்.செல்லத்துரை சண்முகநாதன் அவர்கள்.

எப்போதும் சிரித்த முகமும், தப்பாது நேர் நின்று தவறுகளை சுட்டிக்காட்டும் குணமும் கொண்ட வல்லமை மிக்க மனிதனாக வாழ்ந்திருந்தவர். இவரது வாழ்வு முழுமையும் கணேசபுர மண்ணோடும், மக்களோடும் இரண்டறக் கலந்திருந்ததை அனைவரும் அறிந்ததே! கிளிநொச்சி மாவட்டத்தின் அனைத்துத் தரப்பினருக்கும் அறிமுகமான மனிதனாய் வாழ்ந்திருந்து அந்த மண்ணின் மைந்தனாக மடிந்து போன இவரின் வாழ்வியலை கணேசபுர மக்களால் எளிதில் மறந்துவிட முடியாது.

கிராம அபிவிருத்திச் சங்கம், சனசமூக நிலையம் உள்ளிட்ட சமூகமட்ட அமைப்புக்களின் தலைவராக, உறுப்பினராக, பல ஆலயங்களின் அறங்காவலர் சபை அங்கத்தவராக, சிறந்த சுட்டுறவாளனாக, இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க கிளிநொச்சி மாவட்டக் கிளையின் ஆயுட்கால உறுப்பினராக, மக்கள் சேவையை மனங்கொண்ட ஓர் சமாதான நீதிவானாக பல்பரிமாணங்களில் அவர் இந்த மண்ணுக்கு ஆற்றிச் சென்றிருக்கின்ற மக்கள் பணி மகத்தானது.

காலப்பெருவெளியில் கரைந்து போகும் சாதாரண மனிதனாக அல்லாது தன் ஊரோடும், உறவுகளின் உணர்வோடும் கலந்து, 'சண்முகம் அண்ணராய்' எம் எல்லோர் உள்ளங்களிலும் நிறைந்து, வாழும் காலம் முழுதும் வாழ்வாங்கு வாழ்ந்திருந்த அமரரின் மறைவால் துயர் சுமந்திருக்கும் அவரது உறவுகளின் துயரில் நானும் பங்கெடுப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தி பெற எல்லாம் வல்ல இறைவனின் பாதாரவிந்தங்களைப் பணிந்து நிற்கிறேன்.

சிவஞானம் சிறீதரன்.
பாராளுமன்ற உறுப்பினர்.
யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டம்
கிளிநொச்சி

சி.சிறீதரன்,
பாராளுமன்ற உறுப்பினர்,
யாழ்ப்பாண தேர்தல் மாவட்டம்.
இல: 882, ஆறுமுகம் வீதி,
வட்டக்கச்சி, கிளிநொச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊருக்காய் வாழ்ந்தவர் பாதையை உலகம் தேடும் உலகம் போற்றும்

அமரர் செல்லத்துரை சண்முகநாதனைப் பற்றி சொல்வதென்றால் அவர் எவ்வாறு வாழ்ந்தார், எப்பணிகளை செய்தார் என்பதை அவரின் இறுதி நிகழ்வின்போது உறவுகளின் சோகத்தின் மூலமும் அஞ்சலி உரை ஆற்றியவர்கள் மூலமும் கலந்துகொண்ட மக்கள் மூலமும் யாவரும் அறிந்திருப்பர். இலை மறைகாயாக இந்த மக்களுக்கு ஆற்றிய பணிகளை இலகுவில் யாரும் மறந்துவிட முடியாது.

எதை செய்யுமுன்பும் தனது சுயபுத்தியை உபயோகித்து அடுத்தவர்கள் பேச்சை மட்டும் கேட்டு செய்யாது அதை சீர்தூக்கி நன்மை, தீமை அறிந்துசெய்யும் தன்மை கொண்டவர் வாழ்வின் இறுதிக் காலத்தில் அவரின் செயல்கள் ஆன்மிகத்தில் எவ்வளவு பற்றுக்கொண்டவர் என்பதனை அறியக்கூடியதாக இருந்தது. மேல்மருத்வத்தூர் ஆதிபராசக்தி மன்ற வளவுக்குள் அன்னைக்கு பூ பயன்படவேண்டும். என்று தன்னுடைய காணிக்குள் இருந்து மரத்துடன் பெயர்த்துக்கொண்டு வந்து என்னிடம் தந்த நினைவும், அப்போது எனது சகோதரங்களுக்கு மட்டும் எனது மகளின் திருமணப்பேச்சுப்பற்றி கூறியிருந்த நிலையில் எனது சகோதரம் போல் அவரை நினைத்து அவருக்கு தெரியப்படுத்தியது எனக்கு மனநிறைவை தந்தது. அவரும் அதை அன்புடன் பகிர்ந்துகொண்டார்.

ஏழ்மையிலும், நேர்மையாகவும், கோபத்திலும் பொறுமையாகவும், தோல்வியிலும் விடா முயற்சியாளனாகவும், வறுமையிலும் உபகாரணாகவும், துன்பத்திலும் தைரியமாகவும், செல்வத்திலும் எளிமையாகவும், பதவியிலும் பணிவுகொண்ட மனிதனாக வாழ்ந்து இவ்வுலக வாழ்வை நிறைவுசெய்து எம்மைவிட்டு பிரிந்தாலும், அவர் நினைவுகள் எம்மைவிட்டகலா

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!
ஓம் சக்தி

சிவசம்பு-
(பத்மா ஏஜென்சி,கிளிநொச்சி).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணேசபுரம் சனசமூக நிலையம்
# Kanesapuram Community Center

*Kanesapuram,*
*Kilinochchi.*

பதிவு எண் / Reg. No } NP/14/45(1)/2/1/CC-054

கணேசபுரம்,
கிளிநொச்சி.

T.P No :

.................... தலைவர் /President .................... செயலாளர் /Secretary .................... பொருளாளர் /Treasurer

## கணேசபுரத்தில் ஓர்
## ஈடுசெய்ய முடியாத இழப்பு

*"தோன்றில் புகழொடு தோன்றுக*
*அஃதிலார் தோன்றலில் தோன்றாமை நன்று"*

என்ற வள்ளுவப் பெருமானின் வாக்கிற்கமைய இம்மண்ணுலகிலே அவதரித்த அமரர் செல்லத்துரை சண்முகநாதன் அவர்கள் இவ்வுலகைவிட்டுச் சென்றார் என்ற செய்தி கணேசபுர கிராமத்தையே பெரும் சோகத்தில் ஆழ்த்திற்று. முதல் நாள் தானே அந்த லேடிஸ் சைக்கிள் போனவர் சண்முகண்ணா என்றே அனைவரது புலம்பல் நோயுற்ற போதும் அதனை பெரும் பொருட்டாக எண்ணாது கிராமம் கிராம முன்னேற்றம் என வேலைத்திட்டங்களிலே ஓடி ஓடித் திரியும் உன்னத மனிதன்.

எந்தக் கூட்டமே சண்முகண்ணன் இல்லாத கூட்டமில்லை என்று கூறமுடியும். கிராம அபிவிருத்தி சங்க கூட்டமாய் இருக்கட்டும் சனசமூக நிலைய கூட்டமாய் இருக்கட்டும் அவரது முகம் அங்கும் இருக்கும் பிரதேச சபையிலோ / பிரதேச செயலகத்திலோ மாவட்டச் செயலகத்திலோ எம் கிராம பிரதிநிதி அண்ணனே. நடைபெறும் கூட்டங்களில் எடுக்கப்படும் முடிவு கட்சிதமாகவும் சீரும் சிறப்புமாய் அமைய ஓர் அறிவுரையாளன் அண்ணனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிராமம் கடந்து நம் தமிழ்த்தேசத்திற்கே சேவையாற்ற அண்ணன் கூட்டுறவாளனாய் செஞ்சிலுவை சங்க ஆயுட்கால அலுவலகத்தவராய் இருந்து பல சேவைகள் புரிந்ததும் குறிப்பிடத்தக்கதே. ஒருசிறு சைக்கிள் கடைபோட்டு திருத்துனராய் தன்னை காட்டி மகான் தன் மறுபக்க சுயரூபத்தை அமைதியான பணியாய் ஆற்றியது சொல்ல வார்த்தைகள் தமிழிலே போதாது எனலாம். தன் சேவையில் மட்டுமன்றி குடும்பத்திலும் உயர் அன்பான பாரியருக்கு கணவனாய் குழந்தைகட்கு வழிகாட்டும் உன்னதமான தந்தையாய் பேரக்குழந்தைகட்கு அன்பான பாச பேரனாய் தன் வகிபாகங்களை கொண்டு உறவுகளின் உன்னத காவலனாய் விளங்கிய அண்ணன் என்னுடன் வன்னேரிக்குளத்தை உறவு இவர் இழப்பு என்னை ஒருகணம் உலுப்பியது.

அன்பான பண்புமிக்க சண்முகம் அண்ணன் சேவை என்றும் அவர் சந்ததியினரால் தொடரும் எனக் கூறி அவரது பிரிவால் துயருறும் அனைத்து உள்ளங்களுக்கும் அமைதியும் சாந்தமுமடைய எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன். அண்ணன் ஆத்மா சாந்தியடையட்டும்.

ஓம் சாந்தி ! சாந்தி!! சாந்தி!!!

இ.ஜெயசுதர்சன்
**Lion SRJ** சுதன் ஆசிரியர் **(J.P)**
தலைவர்
கணேசபுரம் சனசமூக நிலையம்
கிளிநொச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்காத நினைவுகளுடன்...
# அமரர் செல்லத்துரை சண்முகநாதன் JP

கிளிநொச்சி மாவட்டத்தின் கணேசபுரம் என்ற மருதநிலம் உடைய பூர்வீக கிராமத்தில் வாழ்ந்து சமூகமட்ட அமைப்புக்களில் பல்வேறு படிநிலைகளில் கிராமத்தை கட்டிவளர்த்து பெயர் சொல்லும் அடையாளமாக வாழ்ந்து அமரத்துவமடைந்த பெருமனிதர் சண்முகநாதன் ஐயா,

கரைச்சி தெற்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தில் கணேசபுரம் கிளைக்குழுவை பலம் பெறவைத்து அதன்மூலம் சங்கத்தின் நெறியாளர் குழுவில் பலதடவைகள் பணிப்பாளராக தெரிவுசெய்யப்பட்டு கூட்டுறவுத்துறைக்கு பெரும் பங்காற்றினார். ஒரு கூட்டுறவாளன் கூட்டுறவுத்துறைக்கு எப்படி தொண்டு செய்ய வேண்டும் என்பதற்கும் ஒரு சங்கத்தின் பணிப்பாளர் எவ்வாறு சங்கத்தை முன்னோக்கி வழிநடத்த வேண்டும் என்பதற்கும் சிறந்த எடுத்துக்காட்டாக திகழ்ந்தவர்.

அன்னாரது இழப்பு குடும்பத்தினருக்கும் மட்டுமல்லாது கூட்டுறவுத்துறைக்கும் பேரிழப்பாகும். முதிர்ந்த கூட்டுறவாளரை இழந்த வேதனையுடன் அவர் எண்ணங்களை சுமந்து கூட்டுறவுத்துறை பயணிக்கும், என்றும் அவர் நினைவுகள் நீங்காது நிலைத்திருக்கும்....

*கூட்டுறவாளர் நினைவுகளுடன்...*

**விஷ்ணுநாதன் சுவிஷ்கரன் JP**
பொதுமுகாமையாளர்,
கரைச்சி தெற்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் (வ.து)
கிளிநொச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதேச சபையிலிருந்து.....

கிளிநொச்சி மண்ணின் முதல் குடியேற்ற கிராமமாகிய கணேசபுரம் கிராமத்தின் மருமகனாக வந்து கணேசபுரத்தின் வாழ்வியலோடு வலி கலந்த வசந்தத்தோடும் இரண்டறக் கலந்து வாழ்ந்த அமரர் செல்லத்துரை சண்முகநாதன் அவர்களின் மறைவு மனதை நெருடுகிறது.

பழம்பெரும் பூநகர் மண்ணின் மைந்தனாகி கணேசபுர மதிப்புமிகு குடும்பமான மார்க்கண்டு கண்மணி இணையரின் குடும்பத்தில் இல்லற பந்தத்தில் இணைந்து கொண்டவர் சண்முகம் அண்ணர்.

சிறிய வயதிலிருந்து சைக்கிள்ள கடை சண்முகண்ணை என்பது எவை ஆரம்பகால மனப்பதிவு ஆகும் பின்னர் கணேசபுர கிராமத்தில் கிராமிய அமைப்புக்களில் அவர் செயற்பட்ட விதமும் அவரது மக்களுக்கான செயலாற்றுகையும் மனதை கவர்ந்தவை. ஈழப்போராட்டம் மண்ணில் வீரியம் கொண்ட போது ஒருவிடுதலை இயக்கத்தின் மக்கள் அணி செயற்பாட்டாளராக நின்று அதன் தூனாக சண்மகம் அண்ணர்.

கூட்டுறவு சங்கத்திலும், செஞ்சிலுவைச் சங்கத்திலும் , கிராமி சங்கங்களிலும் பதவி எதிர்பாரா மக்கள் தொண்டனாவர்.

நயந்துபேசும் நற்பண்புடையோராக வியர்ந்து பார்க்கும் முரண்பாடற்றவராக வாழ்வில் சிறந்தவர் கிளிநொச்சியினுடைய எல்லா அபிவிருத்தி சங்கங்களிலும் கணேசபுரத்தின் அடையாளமாக திகழ்ந்த சண்முகநாதன் அவர்கள் அன்பும் அறனும் இணைந்த இல் வாழ்க்கையூடாக நல்ல பிள்ளைகளாக எங்கள் மண்ணிற்கு அளித்து வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து இறைபதம் எய்தியவர் அமரர் சண்முகநாதன் அவர்களின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்தித்து அவரது மனைவி நாகேசக்கா, பிள்ளைகள், மற்றும் உறவுகள் ஆறுதலடைய பிரார்த்திக்கின்றேன்.

அ.வேழமாலிகிதன்
கௌரவ தவிசாளர்
கரைச்சிப் பிரதேச சபை,
கிளிநொச்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரணித்தும் வாழ்ந்து கொண்டிருக்கும் செ.சண்முகநாதன் ஐயா

மரணித்த பின்பும் வாழ்ந்து கொண்டிருக்கும் செல்லத்துரை சண்முகநாதன் அவர்கள் எமது கணேசபுரத்தின் ஒரு மைல்கல் என்றுதான் கூறத்தோன்றுகின்றது. ஏனெனில் தன்னலம் பாராது சமூக நலனிற்கு கடந்த நான்கு தசாப்தத்திற்கு மேலாக ஊரக அபிவிருத்திக்காக உழைத்தவர் என்பதை மறக்கவோ, மறுக்கவோ, மறைக்கவோ முடியாது. எமது கிராம சனசமூக நிலையம் மற்றும் R.D.S அமைப்புகளின் ஏற்றத்திற்காக முன்னின்று உழைத்தவர் மேலும் மக்களோடு இன்முகம் காட்டி சுமுகமான உறவைப்பேணி நிர்வாகத்தினைத் திறம்பட ஆற்றிய பெருமைக்குரிய உத்தமரும் ஆவார். அந்தவகையில் அமரர் செ.சண்முகநாதன் ஐயா "இறக்கத்தான் பிறந்தோம் இருக்கும் வரை இரக்கத்தோடு வாழ்ந்து" காட்டி இறப்பின் பின்பும் கணேசபுரம் கிராமத்தில் வாழ்கிறார். வாழ்வார் என்று கூறி அமரர் அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்திற்கு நெஞ்சம் நெகிழ்ந்த அஞ்சலியைத் தெரிவித்து அமரரது ஆத்மா சாந்தியடைய சர்வவல்லமை உள்ள இறைவனை கணேசபுரம் R.D.S சார்பாக வேண்டி நிற்கின்றோம்.

தலைவர்
க.சச்சிதானந்தசிவம்
கிராம அபிவிருத்திச் சங்கம்,
கணேசபுரம், கிளிநொச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4ஆம் திருமுறை
## திருஅங்கமாலை - பண் சாதாரி

திருச்சிற்றம்பலம்

இப்பதிகம் உடலின் புறஉறுப்புகளும் அக உறுப்புகளும் இறைவன் வழிபாட்டிற்கே உரியன, என்பதை வலியுறுத்தும்.

தலையே நீவணங்காய் - தலை
மாலை தலைக்கணிந்து
தலையா லேபலி தேருந் தலைவனைத்
தலையே நீவணங்காய். 1

கண்காள் காண்மின்களோ - கடல்
நஞ்சுண்ட கண்டன்றன்னை
எண்டோ ள் வீசிநின் றாடும் பிரான்றன்னைக்
கண்காள் காண்மின்களோ. 2

செவிகாள் கேண்மின்களோ - சிவன்
எம்மிறை செம்பவள
எரிபோல் மேனிப்பி ரான்றிறம் எப்போதுஞ்
செவிகாள் கேண்மின்களோ. 3

மூக்கே நீமுரலாய் - முது
காடுறை முக்கணனை
வாக்கே நோக்கிய மங்கை மணாளனை
மூக்கே நீமுரலாய். 4

வாயே வாழ்த்துகண்டாய் - மத
யானை யுரிபோர்த்துப்
பேய்வாழ் காட்டகத் தாடும் பிரான்றன்னை
வாயே வாழ்த்துகண்டாய். 5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெஞ்சே நீநினையாய் - நிமிர்
புன்சடை நின்மலனை
மஞ்சா டும்மலை மங்கை மணாளனை
நெஞ்சே நீநினையாய். 6

கைகாள் கூப்பித்தொழீர் - கடி
மாமலர் தூவிநின்று
பைவாய்ப் பாம்பரை யார்த்த பரமனைக்
கைகாள் கூப்பித்தொழீர். 7

ஆக்கை யாற்பயனென் - அரன்
கோயில் வலம்வந்து
பூக்கை யாலட்டிப் போற்றி யென்னாதவிவ்
வாக்கை யாற்பயனென். 8

கால்க ளாற்பயனென் - கறைக்
கண்ட னுறைகோயில்
கோலக் கோபுரக் கோகர ணஞ்சூழாக்
கால்க ளாற்பயனென். 9

உற்றா ராருளரோ - உயிர்
கொண்டு போம்பொழுது
குற்றா லத்துறை கூத்தனல் லால்நமக்
குற்றார் ஆருளரோ. 10

இறுமாந் திருப்பன்கொலோ - ஈசன்
பல்கணத் தெண்ணப்பட்டுச்
சிறுமா னேந்திதன் சேவடிக் கீழ்ச்சென்றங்
கிறுமாந் திருப்பன்கொலோ. 11

தேடிக் கண்டுகொண்டேன் - திரு
மாலொடு நான்முகனுந்
தேடித் தேடொணாத் தேவனை என்னுளே
தேடிக் கண்டுகொண்டேன். 12



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்பொன்னூஞ்சல்

## அருட்சுத்தி தில்லையில் அருளியது
## (தரவுகொச்சகக் கலிப்பா)

திருச்சிற்றம்பலம்

சீரார் பவளங்கால் முத்தங் கயிறாக
ஏராரும் பொற்பலகை ஏறி இனிதமர்ந்து
நாரா யணன் அறியா நாண்மலர்த்தாள் நாயடியேற்கு
ஊராகத் தந்தருளும் உத்தர கோசமங்கை
ஆரா அமுதின் அருள்தா ளிணைபாடிப்
போரார் வேற்கண்மடவீர் பொன்னூசல் ஆடாமோ. 1

மூன்றங் கிலங்கு நயனத்தன் மூவாத
வான்தங்கு தேவர்களுங் காணா மலரடிகள்
தேன்தங்கித் தித்தித் தமுதூறித் தான்தெளிந்தங்கு
ஊன்தங்கி நின்றுருக்கும் உத்தர கோசமங்கைக்
கோன்தங் கிடைமருது பாடிக் குலமஞ்ஞை
போன்றங் கனநடையீர் பொன்னூசல் ஆடாமோ. 2

முன்னீறும் ஆதியு மில்லான் முனிவர்குழாம்
பன்னூறு கோடி யிமையோர்கள் தாம் நிற்பத்
தன்னீ றெனக்கருளித் தன்கருணை வெள்ளத்து
மன்னூற மன்னுமணி யுத்தர கோசமங்கை
மின்னேறு மாட வியன்மா ளிகைபாடிப்
பொன்னேறு பூண்முலையீர் பொன்னூசல் ஆடாமோ. 3

நஞ்சமர் கண்டத்தன் அண்டத் தவர்நாதன்
மஞ்சுதோய் மாடமணி உத்தரகோசமங்கை
அஞ்சொலாள் தன்னோடுங் கூடி அடியவர்கள்
நெஞ்சுளே நின்றமுத மூறிக் கருணைசெய்து
துஞ்சல் பிறப்பறுப்பான் தூய புகழ்பாடிப்
புஞ்சமார் வெள்வளையீர் பொன்னூசல் ஆடாமோ. 4

ஆணோ அலியோ அரிவையோ என்றிருவர்
காணாக் கடவுள் கருணையினால் தேவர்குழாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாணாமே உய்யஆட் கொண்டருளி நஞ்சுதனை
ஊணாக உண்டருளும் உத்தர கோசமங்கைக்
கோணார் பிறைச்சென்னிக் கூத்தன் குணம்பரவிப்
பூணார் வனமுலையீர் பொன்னூசல் ஆடாமோ. 5

மாதாடு பாகத்தன் உத்தர கோசமங்கைத்
தாதாடு கொன்றைச் சடையான் அடியாருள்
கோதாட்டி நாயேனை ஆட்கொண்டென் தொல்பிறவித்
தீதோடா வண்ணந் திகழப் பிறப்பறுப்பான்
காதாடு குண்டலங்கள் பாடிக் கசிந்தன்பால்
போதாடு பூண்முலையீர் பொன்னூசல் ஆடாமோ. 6

உன்னற் கரியதிரு வுத்தர கோசமங்கை
மன்னிப் பொலிந்திருந்த மாமறையோன் தன்புகழே
பன்னிப் பணிந்திறைஞ்சப் பாவங்கள் பற்றறுப்பான்
அன்னத்தின் மேலேறி ஆடுமணி மயில்போல்
என்னத்தன் என்னையும் ஆட்கொண்டான் எழில்பாடிப்
பொன்னொத்த பூண்முலையீர் பொன்னூசல் ஆடாமோ. 7

கோலவரைக்குடுமி வந்து குவலயத்துச்
சால அமுதுண்டு தாழ்கடலின் மீதெழுந்து
ஞால மிகப்பரிமேற் கொண்டு நமையாண்டான்
சீலந் திகழுந் திருவுத்தர கோசமங்கை
மாலுக் கரியானை வாயார நாம்பாடிப்
பூலித் தகம்குழைந்து பொன்னூசல் ஆடாமோ. 8

தெங்குலவு சோலைத் திருஉத்தர கோசமங்கை
தங்குலவு சோதித் தனியுருவம் வந்தருளி
எங்கள் பிறப்பறுத்திட் டெந்தரமும் ஆட்கொள்வான்
பங்குலவு கோதையுந் தானும் பணிகொண்ட
கொங்குலவு கொன்றைச் சடையான் குணம்பரவிப்
பொங்குலவு பூண்முலையீர் பொன்னூசல் ஆடாமோ. 9



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பட்டினத்தார் பாடல்

நினைமின் மனனே ! நினைமின் மனனே
சிவபெரு மானைச் செம்பொனம் பலவனை
நினைமின் மனனே ! நினைமின் மனனே !
அலகைத் தேரின் அலமரு காலின்
உலகப்பொய் வாழ்க்கையை உடலை ஓம்பற்க ! 1

பிறந்தன இறக்கும், இறந்தன பிறக்கும்
தோன்றின மறையும், மறைந்தன தோன்றும்
பெருத்தன சிறுக்கும், சிறுத்தன பெருக்கும்
உணர்ந்தன மறக்கும், மறந்தன உணரும்
புணர்ந்தன பிரியும், பிரிந்தன புணரும் 2

அருந்தின மலமாம், புனைந்தன அழுக்காம்
உவப்பன வெறுப்பாம், வெறுப்பன உவப்பாம்
என்றிவை அனைத்தும் உணர்ந்தனை அன்றியும்
பிறந்தன பிறந்தன பிறவிகள் தோறும்
கொன்றனை அனைத்தும், அனைத்து நினைக்கொன்றன. 3

தின்றனை அனைத்தும், அனைத்து நினைக் கொன்றன்
பெற்றனை அனைத்தும், அனைத்து நினைப் பெற்றன்
ஓம்பினை அனைத்தும், அனைத்து நினை ஓம்பின்
செல்வத்துக் களித்தனை, தரித்திரத்து அழுங்கினை
சுவர்க்கத்து இருந்தனை, நரகில் கிடந்தனை 4

இன்பமும் துன்பமும் இருநிலத்து அருந்தினை
ஒன்றொன்று ஒழியாது உற்றனை அன்றியும்,
புற்புதக் குரம்பைத் துச்சில் ஒதுக்கிடம்
என்னநின் றியங்கும் இருவினைக் கூட்டைக்
கல்லினும் வலிதாகக் கருதினை இதனுள் 5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பீளையும் நீரும் புறப்படும் ஒருபொறி
மீளுங் குறும்பி வெளிப்படும் ஒரு பொறி
சளியும் நீரும் தவழும் ஒருபொறி
உமிழ்நீர் கோழை ஒழுகும் ஒருபொறி
வளியும் மலமும் வழங்கும் ஒருவழி 6

சலமும் சீயும் சரியும் ஒருவழி
உள்ளூறத் தொடங்கி வெளிப்பட நாறும்
சட்டகம் முடிவில் சுட்டெலும் பாகும்
உடலூறு வாழ்க்கையை உள்ளூறத் தேர்ந்து,
கடிமலர்க் கொன்றைச் சடைமுடிக் கடவுளை. 7

ஒழிவருஞ் சிவபெரும் போகஇன் பத்தை,
நிலுலெனக் கடவா நீர்மையொடு பொருந்தி
எனதற நினைவற இருவினை மலமற
வரவொடு செலவற மருளற இருளற
இரவொடு பகலற இகபரம் அற ஒரு 8

முதல்வனைத் தில்லையுள் முளைத்தெழுஞ் சோதியை
அம்பலத் தரசனை ஆனந்தக் கூத்தனை
நெருப்பினில் அரக்கென நெக்குநெக் குருகித்
திருச்சிற் றம்பலத்து ஒளிருஞ் சிவனை,
நினைமின் மனனே ! நினைமின் மனனே ! 9

சிவபெரு மானைச் செம் பொனம்பலவனை
நினைமின் மனனே ! நினைமின் மனனே !


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோயில் திரு அகவல் – 2

காதள வோடிய கலகப் பாதகக்
கண்ணியர் மருங்கில் புண்ணுடன் ஆடும்
காதலும் கருத்தும் அல்லால்நின் இருதாள்
பங்கயம் சூடப் பாக்கியம் செய்யாச்
சங்கடம் கூர்ந்த தமியேன் பாங்கிருந்து 10

அங்கோடு இங்கோடு அலமருங் கள்வர்
ஐவர் கலகமிட்டு அலைக்குங் கானகம்
சலமலப் பேழை இருவினைப் பெட்டகம
வாதபித்தம் கோழை குடிபுகுஞ் சீறூர்
ஊத்தைப் புன்தோல் உதிரக் கட்டளை 11

நாற்றப் பாண்டம் நான் முழத்து ஒன்பது
பீற்றல் துண்டம் பேய்ச்சுரைத் தோட்டம்
அடலைப் பெரிய சுடலைத் திடருள
ஆசைக் கயிற்றில் ஆடும் பம்பரம
ஓயா நோய்க்கிடம் ஓடும் மரக்கலம் 12

மாயா விகாரம் மரணப் பஞ்சரம்
சோற்றுத் துருத்தி தூற்றும் பத்தம்
காற்றில் பறக்கும் கானப் பட்டம்
விதிவழித் தருமன் வெட்டுங் கட்டை
சதுர்முகப் பாணன் தைக்குஞ் சட்டை 13

ஈமக் கனலில் இடுசில விருந்து
காமக் கனலில் கருகும் சருக்
கிருமி கிண்டுங் கிழங்கஞ் சருமி,
பவக்கொழுந்து ஏறுங் கவைக் கொழு கொம்பு
மணமாய் நடக்கும் வடிவின் முடிவில் 14


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிணமாய்க் கிடக்கும் பிண்டம் பிணமேல்
ஊரில் கிடக்க வொட்டா உபாதி
கால் எதிர் குவித்தபூளை காலைக்
கதிர் எதிர்ப்பட்ட கடும்பனிக் கூட்டம்
அந்தரத்து இயங்கும் இந்திர சாபம் 15

அதிரும் மேகத்து உருவின் அருநிழல்
நீரில் குமிழி நீர்மேல் எழுத்து
கண்துயில் கனவில் கண்ட காட்சி
அதனினும் அமையும் பிரானே! அமையும
இமைய வல்லி வாழிஎன் றேத்த 16

ஆனந்தத் தாண்டவம் காட்டி
ஆண்டுகொண்டருள்கை நின் அருளினுக்கு அழகே!

கோயில் திரு அகவல் – 3
பால்கடல் கடையப் படுங்கடு வெண்ணெயைத்
திருமிடற்று அடக்கிய சிவனே அடைக்கலம்!
அடங்கலும் அடக்கிடும் கடுங்கொலைக் காலனைக்
கால்எடுத் தடக்கிய கடவுள் நின் அடைக்கலம்
உலகு அடங் கலும்படைத்து உடையவன் தலைபறித்து 17

இடக்கையில் அடக்கிய இறைவ! நின் அடைக்கலம்!
செய்யபொன் னம்பலச் செல்வ! நின் அடைக்கலம
ஐய! நின் அடைக்கலம் அடியன் நின் அடைக்கலம்
மனவழி அலைத்திடும் கனவெனும் வாழ்க்கையும்
விழுப்பொருள் அறியா வழுக்குமறு மனனும 18


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆணவ மலத்துதித்து அளைந்ததில் உளைந்திடும்
நினைவைப் புழுவென நெளிந்திடு சிந்தையும
படிறும் பாவமும் பழிப்புறு நினைப்பும்,
தவறும் அழுக்காறும் இவறுபொச் சாப்பும்
கவடும் பொய்யும் சுவடும் பெருஞ்சின 19

இகலும், கொலையும், இழிப்புறு புன்மையும்,
பகையும், அச்சமும், துணிவும், பனிப்பும்,
முக்குண மடமையும், ஐம்பொறி முயக்கமும்,
இடும்பையும் பிணியும் இடுக்கிய ஆக்கையை
உயிர் எனுங் குருகுவிட்டு ஓடும் குரம்பையை 20

எலும்பொடு நரம்புகொண்டு இடையில் பிணித்துக்
கொழுந்தசை வேய்ந்தும் ஒழுக்கு விழுங் குடிலைச்
செழும்பெழு உதிரச் சிறுபுழுக் குரம்பையை,
மலவுடல் குடத்தைப் பலவுடல் புட்டிலைத்
தொலைவிலாச் சோற்றுத் துன்பக் குழியைக் 21

கொலை படைக் கலம்பல கிடைக்கும் கூட்டைச்
சலிப்புறு வினைப் பலசரக்குக் குப்பையைக்
கோள்சரக்கு ஒழுகும் பீற்றல் கோணியைக்
கோபத்தீ மூட்டுங் கொல்லன் துருத்தியை,
ஐம்புலப் பறவை அடையும்பஞ் சரத்தை. 22

புலராக் கவலை விளைமரப் பொதும்பை,
ஆசைக் கயிற்றில் ஆடும்பம் பரத்தைக்
காசிற் பணத்திற் சுழலுங் காற்றாடியை,
மக்கள் வினையின் மயக்குந் திகிரியைக்,
கடுவெளி உருட்டிய சகடக் காலைப் 23
பாவச் சரக்கொடு பவக்கடல் புக்குக்
காமக் காற்றெடுத்து அலைப்பக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கெடுவழிக் கரைசேர் கொடுமரக் கலத்தை
இருவினை விலங்கொடும் இயங்குபுற் கலனைக்
நடுவன்வந் தழைத்திட நடுங்கும் யாக்கையைப் 24

பிணமெனப் படுத்தியான் புறப்படும் பொழுதுநின்
அடிமலர்க் கமலத்துக்கு அபயம்நின் அடைக்கலம்
வெளியிடை உரும்இடி இடித்தென வெறித்தெழுங்
கடுநடை வெள்விடைக் கடவுள்நின் அடைக்கலம்
இமையா நாட்டத்து இறையே! அடைக்கலம 25

அடியார்க்கு எளியாய்! அடைக்கலம் அடைக்கலம்
மறையவர் தில்லை மன்றுள்நின் றாடிக்
கருணை மொண்டு அலையெறி கடலே! அடைக்கலம்,
தேவரும் முனிவரும் சென்றுநின் றேத்தப்
பாசிழைக் கொடியொடு பரிந்து அருள் புரியும் 26

எம்பெரு மானின் இணையடிக்கு அபயம்
அம்பலத் தரசே அடைக்கலம் உனக்கே!

கச்சித் திரு அகவல்
திருமால் பயந்த திசைமுகன் அமைத்து
வரும் ஏழ் பிறவியும் மானுடத் துதித்து
மலைமகள் கோமான் மலர் அடி இறைஞ்சிக்
குலவிய சிவபதங் குறுகாது அவமே
மாதரை மகிழ்ந்து காதல் கொண்டாடும் 27

மானிடர்க் கெல்லாம் யானெடுத் துரைப்பேன்
விழிவெளி மாக்கள் தெளிவுறக் கேண்மின்
முள்ளும் கல்லும் முயன்று நடக்கும்
உள்ளங் காலைப் பஞ்சென உரைத்தும்,
வெள்ளெலும் பாலே மேவிய கணைக்கால் 28



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துள்ளும் வரால் எனச் சொல்லித் துதித்தும்,
தசையும் எலும்புந் தக்கபுன் குறங்கை
இசையுங் கதலித் தண்டென இயம்பியும்
நெடும் உடல் தாங்கி நின்றிடும் இடையைத்
துடிபிடி யென்று சொல்லித் துதித்தும், 29

மலமும் சலமும் வழும்புந் திரையும்
அலையும் வயிற்றை ஆலிலை யென்றும்,
சிலந்தி போலக் கிளைத்துமுன் னெழுந்து
திரண்டு விம்மிச் சீப்பாய்ந்து ஏறி
உகிரால் கீறல் உலர்ந்து உள் உருகி 30

நகுவார்க்கு இடமாய் நான்று வற்றும்
முலையைப் பார்த்து முளரிமொட் டென்றும்,
குலையும் காமக் குருடர்க்கு உரைப்பேன்
நீட்டவும் முடக்கவும் நெடும் பொருள் வாங்கவும்
ஊட்டவும் பிசையவும் உதவி இங் கியற்றும் 31

அலங்கையைப் பார்த்துக் காந்தள் என்றுரைத்தும்,
வேர்வையும் அழுக்கும் மேவிய கழுத்தைப்
பாரினில் இனிய கமுகெனப் பகர்ந்தும்,
வெப்பும் ஊத்தையும் மேவிய வாயைத்
துப்பு முருக்கின் தூய்மலர் என்றும் 32

அன்ன முங் கறியும் அசைவிட்டிறக்கும்
முன்னிய பல்லை முத்தென மொழிந்தும்
நீரும் சளியும் நின்று நின்று ஒழுகும்
கூறிய மூக்கைக் குமிழ் எனக் கூறியும்
தண்ணீர் பீளை தவிராது ஒழுகும் 33



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணைப் பார்த்துக் கழுநீர் என்றும்
உள்ளுங் குறும்பி ஒழுகுங் காதை
வள்ளைத் தண்டின் வளம் என வாழ்த்தியும்
கையும் எண்ணெயும் கலவாது ஒழியில்
வெய்ய அதரும் பேனும் விளையத் 34

தக்க தலை யோட்டில் முளைத்து எழுந்த
சிக்கின் மயிரைத் திரள் முகி லென்றும்
சொற்பல பேசித் துதித்து நீங்கள்
நச்சிச் செல்லும் நரக வாயில்
தோலும் இறைச்சியும் துதைந்து சீப்பாயும் 35

காமப் பாழி கருவிளை கழனி
தூமைக் கடவழி தொளைபெறு வாயில்
எண்சாண் உடம்பும் இழியும் பெருவழி!
மண்பால் காமம் கழிக்கும் மறைவிடம்
நச்சிக் காமுக நாய்தான் என்றும் 36

இச்சித் திருக்கும் இடைகழி வாயில்
திங்கள் சடையோன் திருவருள் இல்லார்
தங்கித் திரியும் சவலைப் பெருவழி
புண் இது என்று புடவையை மூடி
உள் நீர் பாயும் ஓசைச் செழும்புண் 37

மால்கொண்டு அறியா மாந்தர் புகும்வழி
நோய் கொண்டு ஒழியார் நுண்ணியர் போம்வழி
தருக்கிய காமுகர் சாரும் படுகுழி
செருக்கிய காமுகர் சேருஞ் சிறுகுழி
பெண்ணும் ஆணும் பிறக்கும் பெருவழி 38
மலம் சொரிந்து இழியும் வாயிற்கு அருகே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சலம்சொரிந்து இழியும் தண்ணீர் வாயில்
இத்தை நீங்கள் இனிது என வேண்டர்
பச்சிலை இடினும் பத்தர்க்கு இரங்கி
மெச்சிச் சிவபத வீடருள் பவனை 39

முத்தி நாதனை மூவா முதல்வனை
அண்டர் அண்டமும் அனைத்துள புவனமும்
கண்ட அண்ணலைக் கச்சியிற் கடவுளை
ஏக நாதனை இணையடி இறைஞ்சுமின்
போக மாதரைப் போற்றுதல் ஒழிந்தே! 40

திருவேகம்பமாலை

அறந்தான் இயற்றும் அவனிலுங்கோடி அதிகமில்லம்
துறந்தான் அவனிற் சதகோடிஉள்ளத் துறவுடையோன்
மறந்தான் அறக்கற் றறிவோடிருந்திரு வாதனையற்று
இருந்தான் பெருமையை என் சொல்லுவேன் கச்சியேகம்பனே. 41

கட்டிஅணைத்திடும் பெண்டிரு மக்களுங் காலத்தச்சன்
வெட்டிமுறிக்கும் மரம்போல் சரீரத்தை வீழ்த்திவிட்டால்
கொட்டிமுழக்கி அழுவார் மயானங் குறுகியப்பால்
எட்டியடி வைப்பரோ இறைவாகச்சி யேகம்பனே. 42
கைப்பிடிநாயகன் தூங்கையிலேயவன் கையையெடுத்து
அப்புறந்தன்னில் அசையாமல் முன் வைத்தயல் வளவில்
ஒப்புடன் சென்று துயினீத்துப் பின்வந் துறங்குவளை
எப்படி நானம்புவேன் இறைவாகச்சி யேகம்பனே. 43

நன்னாரிற்பூட்டிய சூத்திரப்பாவைநன் னார்தப்பினால்
தன்னாலுமாடிச் சலித்திடுமோஅந்தத் தன்மையைப்போல்
உன்னா லியானுந் திரிவதல்லான் மற்றுனைப்பிரிந்தால்
என்னா லிங்காவதுண்டோ இறைவாகச்சி யேகம்பனே 44



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லறிணக்கமும் நின்பூசை நேசமும் ஞானமுமே
அல்லாது வேறு நிலையுளதோ அகமும் பொருளும்
இல்லாளுஞ் சுற்றமும் மைந்தரும் வாழ்வும் எழிலுடம்பும்
எல்லாம் வெளிமயக்கே இறைவாகச்சி யேகம்பனே. 45

பொல்லா தவனெறி நில்லா தவனைப் புலன்கடமை
வெல்லா தவன்கல்வி கல்லாதவன் மெய் யடியவர்பால்
செல்லா தவனுண்மை சொல்லா தவனின் திருவடிக்கன்பு
இல்லாதவன் மண்ணில் ஏன் பிறந்தேன்கச்சி ஏகம்பனே. 46

பிறக்கும்பொழுது கொடுபோதில்லைப் பிறந்துமண்மேல்
இறக்கும்பொழுது கொடுபோவதில்லை இடைநடுவில்
குறிக்கும்இச் செல்வம் சிவன்தந்த தென்று கொடுக்கறியாது
இறக்குங் குலாமருக்கென் சொல்லுவேன்கச்சி ஏகம்பனே. 47

அன்னவிசாரம் அதுவே விசாரம்அது வொழிந்தாற்
சொன்னவிசாரந் தொலையா விசாரநற் றோகையரைப்
பன்னவிசாரம் பலகால்விசார மிப்பாவி நெஞ்சுக்கு
என்னவிசாரம் வைத்தாய் இறைவாகச்சி ஏகம்பனே. 48

கல்லாப்பிழையுங் கருதாப்பிழையுங் கசிந்துருகி
நல்லாப்பிழையும் நினையாப்பிழையும் நின்அஞ்செழுத்தைச்
சொல்லாப்பிழையுந் துதியாப்பிழையுந் தொழாப்பிழையும்
எல்லாப்பிழையும் பொறுத்தருள் வாய்கச்சி ஏகம்பனே. 49

மாயநட்போரையும் மாயமலமெனும் மாதரையும்
வீயவிட்டோட்டி வெளியேபுறப்பட்டு மெய்யருளாந்
தாயுடன் சென்று பின்தாதையைக் கூடிப்பின்தாயைமறந்து
ஏயுமதேநிட்டை என்றான் எழிற்கச்சி ஏகம்பனே. 50



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேதார கௌரி விரத காப்பு

முன்னின்று செய்யுள் முறையாய்ப் புனைவதற்கு
என்னின் றருள்செய் எலிவா கனப்பிள்ளாய்
சொற்குற்ற மொடு பொருட்குற்றம் சோர்வு தரும்
எக்குற்றமும் வாராமற்கா.

வேண்டுதற் கூறு

காப்பெடுக்க வந்தேனே கௌரியம்மாள் தாயாரே
காத்தென்னைத் தேற்றிடுவாய் காளிமகா தேவியரே
காலமெல்லாம் நின்னரிய காப்பெடுத்தே வாழ்ந்திடுவேன்
எண்ணும் கருமம் இனிதாக முடித்திடுவாய்
பண்ணும் வினையாவும் பனிபோலப் போக்கிடுவாய்
உண்ணும் உணவாக உயிரினுக் குயிராக
என்றும் இருந்தே எனைக்காத்து வந்திடுவாய்
காடும் கடந்துவந்தேன் மலையும் கடந்து வந்தேன்
காளிமகா தேவியரே காப்பெனக்குத் தந்திடுவாய்
சூலம் கொண்டவளே சுந்தர முகத்தவளே
அரியை உடையவளே அம்மா காளிதாயே
கொடியமகிஷாசுரனைக் கூறு போட்டவளே
அசுரக் குணம் யாவும் அழிக்கும் சுடர்க்கொடியே
சிவனை நினைத்தல்லோ சீர்விரதம் நீயிருந்தாய்
பரனை நினைத்தல்லோ பதிவிரதம் நீயிருந்தாய்
அரனை நினைத்தல்லோ அம்மாநீ நோன்பிருந்தாய்
சங்கரனை எண்ணியல்லோ சங்கரிநீ நோன்பிருந்தாய்
ஐங்கரனைப் பெற்றவளே அன்றுநீ நோன்பிருந்தாய்
விரதத்தைக் கண்டே விழித்தான் சிவனவனும்
அம்மா உமை அணைத்தே அருள்மாரி பொழிந்தானே
வகையாற்றுப் படலமிதை வழிவழியாக் காட்டிடுவீர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெறியறியாத் திகைப்போர்க்கு நெறிமுறையைக் காட்டிடுவாய்
காப்பைப் புனைந்துவிடு காலபயம் ஓட்டிவிடு
நூலைப் புனைந்துவிடு நுண்ணறிவை ஊட்டிவிடு
வல்லமையைத் தந்துவிடு வையகத்தில் வாழவிடு
காளிமகா தேவியரே காப்பருளும் தேவியரே
காப்பைப் புனைபவளே காப்பாய் இருப்பவளே
நாடு செழிக்கவென்றே நற்காப்பு அருளுமம்மா
வீடு செழிக்கவென்றே விழைகாப்பு அருளுமம்மா
நல்வாழ்வு வாழ்வதற்கு நறுங்காப்பு அருளுமம்மா
அல்லல் அறுப்பதற்கே அருட்காப்பு அருளுமம்மா
பிள்ளை அற்றவர்க்குப் பெருங்காப்பு அருளுமம்மா
பூமணியே மாமணியே புனிதவதி தாயவளே
நான்விரும்பும் காப்பை நலமுடனே தாருமம்மா
கல்வி சிறப்பதற்குத் கலைமகளே வாருமம்மா
செல்வம் சிறப்பதற்குத் திருமகளே வாருமம்மா
வீரம் சிறப்பதற்கு வீரசக்தி தாருமம்மா
பாட்டுடைத் தலைவியரே பராசக்தி தாயவளே!
ஏட்டுடைத் தலைவியரே எல்லாம்மிகு வல்லமையே
காப்பெடுக்க வந்தேனம்மா கனிவுடனே பாருமம்மா
பால்பழங்கள் வெற்றிலைகள் பல்வகைத் திரவியங்கள்
நானுமக்குத் தாறேனம்மா நயந்தென்னைக் காருமம்மா
காளமகா தேவியரே காசினிக்கு வித்தவளே
வித்தை விதைப்பவளே வினைகாக்கும் காப்பவளே
எத்தால் வாழ்ந்திடுவோம் எல்லாம் உமதருளே
காசினியில் வேற்றுமையை கணபொழுதே மாற்றிவிட்டால்
ஏசலின்றி வாழ்ந்திடுவோம் ஏந்துபுகழ் தேவியளே
காப்பெனக்குப் போட்டுவிட்டால் கல்மனது இளகிவிடும்
ஞானம் பெருகிவரும் நல்வாழ்வு மிகுந்துவரும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ந்து அணிவோர்க்கு தொட்டதெல்லாம் ஜெயமாகும்
இசைந்து அணிவோர்க்கு நினைத்ததெல்லாம் ஈடேறும்
நம்பி அணிவோர்க்கு நல்லதெல்லாம் பெருகிவரும்
நாள்கள் கோள்களெல்லாம் நலமுடனே இணைந்துவரும்
சந்தனச் சாந்தவளே சங்கரியே சாந்தினியே
குங்குமப் பூச்சவளே குலக்கொழுந்தே கௌரியம்மா
காப்புக் கட்டிவிட்டுக் கடமை முடிந்ததென்று
ஏப்பம் மிகவிட்டு என்றுமே இருந்தறியேன்
நாளும் பொழுதிலெல்லாம் நறுங்காப்புக் கட்டதனில்
பூவும் நீருமிட்டுப் போற்றி வணங்கிடுவேன்
காலைப் பொழுதெழுந்து காப்பதனில் விழித்திடுவேன்
ஞானச் செழுஞ்சுடரே காளியுன்னைக் காணுகின்றேன்
காப்பெனக்குக் கையிலுண்டு கடமைகளைச் செய்திடுவேன்
ஏய்ப்பவரைக் கண்டால் எரிமலைபோற் கனன்றிடுவேன்
தீமைச் செயலெதுவும் தெரியாது செய்கையிலே
காப்புக் கையிலிருந்து கண்திறந்து காட்டுமடி
சொல்லற் கரிதான சோதிமிகு காப்பதனை
இருபது நாள்வரையில் இசைவோடு விரதமிரு
பக்தி மனதுடனே பரவி யணிவோர்க்கு
சித்தியெல்லாந்தருவாள் சீர்பெருகு கௌரியவள்
முத்திக்கு வழியுமுண்டு முக்கால உணர்வுமுண்டு
எச்சகத்தி லோர்களெல்லாம் ஏற்றியெமைப் போற்றிடுவர்
சொற்சக்தி பொருட்சக்தி துலங்கி வந்திடவே
அச்சக்தி எல்லாம் அருள்வாள் கௌரியவள்
கௌரிக் காப்பதனைக் காலம் தவறாமல்
முறையாய் அணிந்துவர முன்வினைகள் நீங்கிவர
ஞானம் ஓங்கிவர நல்லறிவு துலங்கிவர
தேவிமகா காளியரே தெவிட்டாத தீங்கனியே
காளியாய் வந்தமர்ந்த கௌரியே காப்பருளும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



விழிநீர் சொரிகின்றோம்...!

மண்ணில் 04 - 11 - 1952

விண்ணில் 15 - 11 - 2021

பூநகரியைப் பிறப்பிடமாகவும்,
கிளிநொச்சி, கணேசபுரத்தை வதிவிடமாகவும் கொண்ட
அமரர்

**செல்லத்துரை சண்முகநாதன் (JP)**

வார்த்தை தடுமாறுகின்றதே!
நேற்றுக் கண்ட உனை நினைத்து
நெஞ்சம் உருகுகின்றதே!!
காந்தமாய் எமையீர்த்த உனை
காலன் கவர்ந்து சென்றதேனோ?
காலமெல்லாம் உம் உறவு
நினைத்துருக காததூரம் எமைவிட்டு
சென்றதேனோ? நாமோ!! இன்று
மங்காத உன் நினைவால்
மயங்கியே நிற்கின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் ஆத்ம சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

அகஸ்தி குடும்பம்
இல.16/1 A, கணேசபுரம்,
கிளிநொச்சி.



கனக்கும் வலியோடு...!

மண்ணில் 04 - 11 - 1952

விண்ணில் 15 - 11 - 2021

பூநகரியைப் பிறப்பிடமாகவும்,
கிளிநொச்சி, கணேசபுரத்தை வதிவிடமாகவும் கொண்ட
அமரர்

**செல்லத்துரை சண்முகநாதன் (JP)**

காலையவன் தன் கணக்கை
சாலவே செய்யவே
ஞாலம்விட்டு வானம் சென்றீரா?
காலம் சென்ற சேதி கேட்டு
கண்ணீர் விட்டுக் கரைகிறோம்.
ஆற்றுவாரில்லை ஆறுதல் சொல்ல
சொற்கள் இல்லை சோகம் தாங்க
மீளாத் துயரில் தவிக்கிறோம்
எந்நாளும் நீங்காது
உன் நினைவுகள்...

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் ஆத்ம சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

[illegible]
[illegible]
பரந்தன்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org












Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Kiruthika , Kesika , Brunghika


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர்க் காணிக்கை...!

பூநகரியைப் பிறப்பிடமாகவும்,
கிளிநொச்சி, கனகபுரத்தை வதிவிடமாகவும் கொண்ட
அமரர்

## செல்லத்துரை சண்முகநாதன் (JP)



| மண் மகிழ | | கண் நெகிழ |
|---|---|---|
| | கண் முன்னே வாழ்ந்த காலம்<br>கனவாகிப் போனாலும் | |
| 1952 | எங்கள் முன்னே உங்கள் முகம்<br>எந்நாளும் உயிர் வாழும் | 2021 |
| 11 | மண் விட்டு மறைந்து<br>நீங்கள் விண்நோக்கிச் சென்றாலும் | 11 |
| 04 | கண் விட்டு மறையாமல்<br>கன காலம் இருப்பீர்கள். | 15 |

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!!

சி.துரைசிங்கம் குடும்பத்தினர்
க.சயந்தன் குடும்பத்தினர்
இல:28, கனகபுரம், கிளிநொச்சி.

வையூரன் பதிப்பகம், கிளிநொச்சி

# இதய அஞ்சலி...!

பூநகரியைப் பிறப்பிடமாகவும்,
கிளிநொச்சி, கனகபுரத்தை வதிவிடமாகவும் கொண்ட
அமரர்

## செல்லத்துரை சண்முகநாதன் (JP)



| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| | அமைதியின் உருவமாகவும்<br>அடக்கத்தின் இருப்பிடமாகவும்<br>பண்பின் பெருந்தகையாகவும் | |
| 1952 | பாசத்தின் உறைவிடமாகவும்<br>எம்மத்தியில் அன்பு ஒளியாக | 2021 |
| 11 | இருந்த உத்தமரே!!<br>மண்ணோடு உங்கள் | 11 |
| 04 | பூவுடல் மறைந்து விட்டாலும்<br>உங்கள் நினைவுகள் எங்கள்<br>இதயங்களில் இருந்து<br>ஒருபோதும் மறைவதில்லை. | 15 |

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!!

அமரத்திலும் கனகாம்பிகை
குடும்பத்தினர்
கனகபுரம், கிளிநொச்சி.

வையூரன் பதிப்பகம், கிளிநொச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொடியின் பெயரும் அதன் பயன்களும்

**01. அறுகம்புல் பொடி**

இரத்த சுத்தி, உடலுக்கு அழகு, உறுதி மூளைக்கு குளிர்ச்சி தரும்.

**02. வல்லாரைப் பொடி**

ஞாபக சக்தி, இரத்த விருத்தி

**03. ஆடாதோடைப் பொடி**

சளி, இருமல், ஆஸ்துமா போக்கி குரல் வளம் உண்டா கும்.

**04. தூதுவளை பொடி**

சளி, இருமல், தும்மல், கண் நோய்கள் போக்கி தாது பலம், ஞாபகசக்தி அபிவிருத்தி.

**05. கீழாகாய் நெல்லிப் பொடி**

காமாலை, கண்நோய், பித்தம், மேகநோய் போக்கி உடல் தேற்றும்.

**06. கருவேப்பிலைப் பொடி**

இளநரை, பித்தம், மலச்சிக்கல் போக்கி முடி வளர்ச்சி ஏற்படும்.

**07. வில்வ இலைப் பொடி**

சர்க்கரை நோய், கண் நோய், சளி, தோல் வியாதி, மேக நோய் போக்கி இரத்தம் சுத்தி தரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**08. கடுக்காய் பொடி**

மலச்சிக்கல், வாய்வு, மூலம், நரம்புத் தளர்ச்சி போக்கி இரத்த சுத்தி உண்டாகும். 108 வகை நோய் குண மாகும்.

**09. பொன்னாங்கன்னி பொடி**

கண் நோய், உடல் சூடு நீக்கி உடல் குளுமையும், தலைமுடி வளர்ச்சியும் ஏற்படும்.

**10. சிறியா நங்கைப் பொடி**

தோல் வியாதி, சர்க்கரை நோய், விசக்கடிகள் நீங்கி நோய் எதிர்ப்பு சக்தி ஏற்படும்.

**11. மஞ்சள் கரிசலாங் கண்ணிப் பொடி**

காமாலை, கல்லீரல் நோய், பல் ஈறு நோய்கள் நீங்கி உடலுக்கு நல்ல நிறத்தைக் கொடுக்கும்.

**12. துப்பை மேனிப் பொடி**

சொறி, சிரங்கு, தோல் வியாதி, கீரிப்புழுவால் ஏற்படும் வயிற்றுவலி போக்கும்.

**13. துளசிப் பொடி**

சளி, இருமல், தும்மல் போக்கும்.

**14. முடக்கற்றான் பொடி**

மூட்டு வலி, முழங்கால் வலி, இடுப்பு வலி நீங்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**15. ஓரிதழ் தாமரைப் பொடி**

நரம்புத் தளர்ச்சி, வெள்ளை, வெட்டை, மலட்டுத்தன்மை, ஆண்மை குறைவு நீங்கும்.

**16. சுக்குப் பொடி**

வாதம், சுவாசக் கோளாறு, மார்பு எரிச்சல், வாய்வு, புளி ஏப்பம், வயிற்றுப் பொருமல், இறைப்பு காய்ச்சல் நீங்கி சுகம் தரும்.

**17. நெல்லிக்கனிப் பொடி**

வாதம், பித்தம், கபம், தலைவலி, தோல், பல், கண்நோய், சர்க்கரை நோய் போக்கி முடிவளர்ச்சி தாது பலம் தரும்.

**18. அத்தி இலைப் பொடி**

சர்க்கரை நோய், மலட்டுத்தன்மை, குடல் புண், உடல் சூடு, பெரும்பாடு, ஆசனக்கடுப்பு நீங்கி இரத்த விருத்தி உண்டாகும்.

**19. நவா வெந்தயப் பொடி**

மதுமேகம் (சர்க்கரை வியாதி) அதிமூத்திரம் கட்டுப்படும்.

**20. சிறு குறிஞ்சான் பொடி**

தோல் வியாதி, சர்க்கரை நோய், விசக்கடிகள், பால் வினை நோய் போக்கி இரத்த சுத்தியாகும்.

**21. வச்சரவல்லிப் பொடி (பிரண்டை)**

பசியின்மை, மூலம், வாய்வு, மாதவிடாய் கோளாறுகள் நீக்கி உடல் தேற்றும். எலும்புகளை வலுவாக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**22. கரிசலாங்கண்ணிப் பொடி**

காமாலை, குஷ்டம், கண் நோய், இளநரை போக்கி இரத்தக் குறைவு முடி வளர்ச்சி தரும்.

**23. கண்டங்கத்தரி பொடி**

காச நோய், இறைப்பு, இளைப்பு நீங்கும். புழுவெட்டு நீங்கும்.

**24. நாவல் விதைப் பொடி**

சர்க்கரை நோய், இரத்த அழுத்தம் நீங்கும்.

**25. வேப்பிலைப் பொடி**

வயிற்றுப் பூச்சிகள், பித்தம், காமாலை, மந்த புத்தி, சொறி, சிரங்கு நீங்கும்.

**26. வாதநாராயணன் பொடி**

வாத நோய்கள், கை, கால் வலி குடைச்சல் நீங்கும்.

**27. திரிபலா அமுதம்**

வாய்வுத் தொல்லை, மலச்சிக்கல் நீங்கும்.

**28. தும்பைப் பொடி**

தும்மல், இருமல், சளி, தலைவலி, கண் புகைகள், வெள்ளைபடுதல் நீங்கும்.

**29. மாவிலைப் பொடி**

சர்க்கரை நோய், சீதபேதி, சளி, தலை கனம், மூலம், வெள்ளை, பல் நோய் நீங்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Covid -19

## கொரோனா வைரஸ் பற்றிய ஓர் கண்ணோட்டம்

உலக சுகாதார அமைப்பு (WHO) Covid -19 ஐ ஒரு பெருந் தொற்று நோயாக அறிவித்துள்ளது. கடந்த 2019ஆம் ஆண்டு சீனாவின் வூஹான் மாநிலத்தில் அறியப்படாத ஓர் வைரஸ் தொற்றாகத் தோற்றம் பெற்ற இந்நோய் வைரஸைப் புரிந்து கொள்வதற்கும் சமாளிப்பதற்கும் ஆராய்ச்சியாளர்களுக்கு சந்தர்ப்பமளிக்காது சொற்பகாலத்திலேயே பரவும் வேகம் அதிகரித்து இன்று பல உயிர்களைக் காவுகொண்டு உலகை நிலைகுலையச் செய்துவிட்டது. உலகளாவிய ரீதியில் பாரிய அழிவினை ஏற்படுத்திய ஓர் கொடிய தொற்று நோயாக்காணப்படுகின்றது.

### Covid -19 இன் அறிகுறிகள்

வைரஸ் முதன்முதலாக தாக்கிய காலகட்டத்தில் இருமல், காய்ச்சல் போன்ற அறிகுறிகள் தென்படும். பின் வாசனை இழத்தல், சுவை உணர்வை இழத்தல் போன்ற அறிகுறிகளுடன், தொண்டைவலி, தலைவலி, உடல்வலி, வயிற்றுப்போக்கு, கண்கள் சிவத்தல், கண்கள் எரிதல், தோலில் வெடிப்புக்கள் ஏற்படல் போன்ற அறிகுறிகளும் தென்படும்.

இந்நோய்த் தொற்று தீவிரமடையும் போது

- சுவாசிப்பதில் சிரமம்
- பேச்சு அல்லது இயக்கம் இழப்பு,
- நெஞ்சுவலி போன்ற அறிகுறிகள் தென்படும்.

### நோய்த்தாக்கம்

இவ் நோய்த்தாக்கமானது ஏற்கனவே தொற்றா நோய்களால் (நீரிழிவு, இதயநோய்கள், சிறுநீரக நோய்கள்) பாதிக்கபட்டவர்களிடையே பாரிய தாக்கத்தினை ஏற்படுத்துவதுடன் சில சமயங்களில் மரணத்தையும் ஏற்படுத்துகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரும்பாலான நோயாளிகள் விரைவில் குணமடைந்தாலும் நொயயெதிர்ப்பு சக்தி குறைந்தளவிலுள்ளவர்கள் (கர்ப்பிணித்தாய்மார், பிறந்த குழந்தைகள், முதியவர்கள், நோய்வாய்ப்பட்டோர்) ஆகியோர்க்கு இத்தொற்று இதயம் மற்றும் நுரையீரலில் அதிக பாதிப்பை ஏற்படுத்துவது ஆய்வுகளினூடு கண்டறியப்பட்டுள்ளது.

## Covid -19 இன் பரவல்

மக்கள் தும்மும்போது அல்லது இருமும்போது வெளிவரும் சளித்துணிக்கைகள் அல்லது திரவத்தளிகளினூடாக வெகுவிரைவில் ஏனையோருக்கும் பரவலடைகின்றது. இவ்வாறு சளித் துணிக்கைகள் மேற்பரப்புகளில் காணப்படும்போது தொடுகை மூலமும் அவை பரம்பலடைகின்றன.

## Covid -19 இன் புதிய திரிபுகள்

உங்களையும் மற்றவர்களையும் Civid -19 தொற்றிலிருந்து பாதுகாக்கச் சில வழிகள்

- குறைந்தது ஒரு மீற்றர் சமூக அடைவெளி பேணல்.
- மூக்கு மற்றும் வாயை மூடும்படி முகக்கவசம் அணிதல்.
- கைகளை அடிக்கடி சவர்க்காரமிட்டுக் கழுவுதல்.
- அங்கீகரிக்கப்பட்ட தடுப்பூசிகளை (Covid -19 தடுப்பு) பெற்றுக்கொள்ளல்.
- தேவையற்ற நடமாற்றங்களைத் தவிர்த்தல்.
- நீராவி பிடித்தல் போன்ற செயற்பாடுகளால் இயன்றளவு தொற்றிலிருந்து பாதுகாப்பாய் வாழ்வோம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்ச விருட்சம்

செல்லத்துரை + வள்ளிப்பிள்ளை
↓
பிள்ளைநார் + புவனேஸ்வரி
செல்வராசா + அன்னம்மா
ஜெகநாதன் + சிவபாக்கியம்
மங்கையற்கரசி + பொன்னுச்சாமி
நாகநாதன் + சத்தியபாமா
சண்முகநாதன்
கமலாம்பிகை + கந்தசாமி
யோக நாதன் + நிர்மலாதேவி

மார்க்கண்டு + கண்மணி
↓
கனகாம்பிகை + குணரட்ணம்
ஞானம்பிகை
நவரத்தினம் + புனிதாஸ்வரி
மகேஸ்வரி + பாலேந்திரன்

சண்முகப்பிரியா
+
அரியநாயகம்
↓
அஸ்வினி
ஆன்சி
அன்ரு

இளங்கீரன்
+
நிர்மலாதேவி
↓
கிருத்திகா
கேசிகா
பிருந்திகா

நந்தினி
+
ஜோன்கெனடி
↓
மிகர்ஷன்
நிதுர்ஷிகன்
தேனுஜா

வதனகீரன்
+
ஜனகா
↓
சஸ்மிதா

மோகனப்பிரியா
+
சோதீஸ்வரன்
↓
கயலரசி (காவியா)
நீருஜா
அகானா
சாகானா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

"எந்நன்றி கொன்றவர்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்நன்றி கொன்ற மகற்கு"

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காகிய அமரர் செல்லத்துரை சண்முகநாதன் அவர்களின் மீளாத்துயில் செய்தி கேட்டு ஆறுதல் கூறியவர்களுக்கும், பலவழிகளிலும் தோளோடு தோள் கொடுத்து உதவிய உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் காலை நாம் கதறியபோது ஓடோடி வந்த அயலவர்களுக்கும் கரம் கொடுத்த உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் இறுதிக்கிரியைகளில் பங்குகொண்டவர்கள், கண்ணீர் அஞ்சலி, பதாதைகள், மலர்மாலைகள் 31ஆம் நாள் நினைவாக மரக்கன்றுகள் அன்பளிப்புச் செய்த மருமகனுக்கும் மற்றும் உடல்சார் உதவிகளும், உள்நாட்டிலும், வெளிநாட்டிலும், தொலைபேசியில் துயர்பகிர்ந்த உறவுகளுக்கும் அந்தியேட்டி நிகழ்வில் ஆத்மா சாந்திக்காக பிரார்த்தித்த உள்ளங்களுக்கும் இம்மலரினை தொகுத்து வழங்கிய ஜெயசுதர்சன் (சுதன் Sir) அவர்களுக்கும், அச்சிட்டுத்தந்த மாறன் பதிப்பகத்திற்கும் மனமார்மார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இங்ஙனம்
குடும்பத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்



எது நடந்ததோ.
அது நன்றாகவே நடந்தது
எது நடக்கிறதோ.
அது நன்றாகவே நடக்கிறது
எது நடக்க இருக்கிறதோ.
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையதை எதை இழந்தாய்.
எதற்காக நீ அழுகிறாய்
எதை நீ கொண்டு வந்தாய்
அதை நீ இழப்பதற்கு
எதை நீ படைத்திருந்தாய்.
அது வீணாவதற்கு
எதை நீ எடுத்துக் கொண்டாயோ
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதைக் கொடுத்தாயோ.
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ
அது நாளை
மற்றொருவருடையதாகின்றது
மற்றொருநாள்.
அது வேறொருவருடையதாகும்.

"இதுவே உலக நியதியும்
எனது படைப்பின் சாராம்சமாகும்"



**பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்.**

... பதிப்பகம், கிளிநொச்சி-0775562963

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org